Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

Spl.S.C.No.63/2025

Dated 12-03-2026
Deposition of witness for : PW 20

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | வயது | : | 46 |
| தந்தை பெயர் | : | சுப்பிரமணியன் | தாலுக்கா | : | பாபநாசம் |
| கிராமம் | : | தேவன்குடி | தொழில் | : | விவசாயம் |

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 2 present. A1 absent 355 BNSS Petition filed and allowed.**

**Counsel Present**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) என்னை போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்யவில்லை. நான் கைப்பட எழுதி வாக்குமூலம் எதுவும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2) பொதுவாக ஒரே பெயரில் கிராமத்தில் பல நபர்கள் இருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரிதான்.

3) என்னிடம் போலிசார் என் கையொப்பமோ, சுருக்கொப்பமோ எதுவும் மாதிரிக்காக வாங்கி சென்றார்களா என்றால் இல்லை.

4) என் பெயர், என் தந்தை பெயர், நிலம் விபரங்கள் குறித்து போலிசார் கிராம நிர்வாக அலுவலரை விசாரித்து வாக்குமூலங்கள் பெற்றார்களா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

5) முதல் விசாரணையில் என்னிடம் காட்டப்பட்ட ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றும் என்னுடைய கையொப்பம் அல்ல என்று போலிசார் அறிவுரையின் பேரில் பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

6) மானிய விலையில் உளுந்து பெற்றுக்கொண்டு தற்போதுபெறவில்லை என்று போலிசார் அறிவுரையின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

மறு விசாரணை அனுமதியுடன்

முதல் விசாரணையில் நான் நீதிமன்றத்தில் பில் எண்.0714928 முதல் 0938453 வரை உள்ள புத்தகம் எண்.2 ல் பக்கம் 302 ல் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் தமிழில்தான் கையெழுத்து போடுவேன். அ.சா.ஆ.9 பக்கம் 10 ல் வரிசை எண்.301 ல் சரவணன் என்ற பெயரில் வலதுபுறம் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்று முன் விசாரணையில் சொல்லி உள்ளது சரிதான். ( எதிரிகள் தரப்பில் ஆட்சேபணைக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.)

மறு குறுக்கு விசாரணை அனுமதியுடன்

நான் மறு விசாரணையில் சொல்லி உள்ள விபரங்கள் போலிசார் சொல்லி கொடுத்து சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.03.12 18:28:52 +0530